**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM I
8069825

# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District : மாவட்டம் மதுரை   PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு   Year: ஆண்டு 2020   FIR No. மு.த.அ. எண் 07/2020   Date: நாள் 29.10.2020

2. (i) Act சட்டம்: Pc Act 1988 as amended by the Pc (amendment) Act 2018   Sections பிரிவுகள்: 7,8 of Pc Act 1988 as amended by the Pc (amendment) Act 2018.
(ii) Act சட்டம்:   Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்:   Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்   Date from : நாள் முதல் 28.10.2020   Date to : நாள் வரை —
Time Period : நேர அளவு —   Time from : நேரம் முதல் 18.15 hrs   Time to : நேரம் வரை 23.30 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 29.10.2020   Time : நேரம் 02.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 29.10.2020   Time : நேரம் 02.30 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக   எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்   சுமார் 10 கி.மீ தென் மேற்கு
Beat Number : முறைக் காவல் எண் —   (b) Address : முகவரி 4, எண் இணை சார் பதிவாளர் அலுவலகம் கதவு எண். 420, கிழக்குத் தெரு, பழங்காநத்தம் மதுரை.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்   District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. R. திருமலை   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு இராமகிருஷ்ணன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு   (d) Nationality : நாட்டினம் இந்தியன்   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் —   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர்   (g) Address : முகவரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மதுரை.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1) திரு. M. பாலமுருகன் வயது 39/20, த/பெ. முத்தையா சார் பதிவாளர், இணை சார்பதிவாளர் எண் 4, அலுவலகம், பழங்காநத்தம், மதுரை. 2) திரு. S. செல்வக்கனி 21/20, த/பெ. சோணைமுத்து 25/3, அக்ரகாரம் தெரு, பழங்காநத்தம், மதுரை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
— தாமதம் இல்லை —

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

—(2)—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது—

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Tr. A. Kannan Rank Inspr. of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS V&AC, Madurai on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

(signature) 29.10.20

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

(signature)

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
29.10.2020 at 04.00 hrs.

Name: பெயர் தி. கீரிபுகலா,
Rank: நிலை காவல் ஆய்வாளர்,
ஊ.த.க. பிரிவு,
மதுரை (29.10.2020)

Submitted,

இன்று 29.10.2020-ம் தேதி அதிகாலை 02.00 மணிக்கு, காவல் ஆய்வாளர் த.சூரியகலா ஆகிய நான், மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் அலுவலில் இருந்த போது, மதுரை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு. இரா.திருமலை என்பவர் மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளராகிய என்னிடம் தனி அறிக்கை அளித்தார். அந்த தனி அறிக்கையை பார்வையிட்டு, மதுரை ஊ.த.க. பிரிவு, காவல்துணை கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் பேரில், மேற்படி தனி அறிக்கை மற்றும் அத்துடன் ஒப்படைத்த திடீர் இணை ஆய்வு குறிப்புரை நாள் : 28.10.2020, மதுரை, பழங்காநத்தம், கீழத்தெரு, கதவு எண். 420-ல் உள்ள இணை சார்பதிவாளர் எண்.4 அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வின் போது இணை சார்பதிவாளர் எண்.4 சார்பதிவாளர் திரு.M.பாலமுருகன் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட லஞ்சப் பணம் ரூ.2,11,000/- சோனைமுத்து மகன் திரு.செல்வக்கனி அவர்களிடமிருந்து கைப்பற்றிய மொத்தம் ரூ.8,000/- ஆக கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.2,19,000/-, பணம் ரூ.2,11,000/- வைக்கப்பட்டிருந்த இருந்த பிரவுன் கலர் கவர், மற்றும் Hi-Rich– என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்ட கருப்பு பார்டர் கொண்ட காக்கி கலர் சாப்பாட்டு பை, மேற்படி அலுவலகத்திலிருந்து கைப்பற்றப்பட்ட பத்து ஆவணங்களையும் மற்றும் சம்பவ இடத்தில் அளித்த வாக்குமூலங்கள் ஆகியவற்றை பார்வையிட்டேன். தனி அறிக்கையில் உள்ள விபரம் பின்வருமாறு. அனுப்புநர்: இரா. திருமலை, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மதுரை. பெறுநர்: காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ந.க. எண்.ஐ1/314/2020, நாள்: 29.10.2020. அய்யா, பொருள்: திடீர் இணை ஆய்வு- மதுரை மாவட்டம்-பதிவுத்துறை -மதுரை இணை சார்பதிவாளர் எண்-4 அலுவலகத்தில் பத்திரங்களை பதிவு செய்வதற்கும், வில்லங்க சான்று நகல் வழங்க, திருமணப்பதிவு, பிறப்பு இறப்பு பதிவு செய்ய வரும் பொது மக்களிடமிருந்து லஞ்சம் பெறுவதாகக் கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் பேரில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது -ரூ.2,19,000/- பணம் மற்றும் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது - மேல் நடவடிக்கை எடுக்கக் கோருவது - தனி அறிக்கை அனுப்புதல் தொடர்பாக. நேற்று 28.10.2020-ம் தேதியன்று, மதுரை, பழங்காநத்தம், கீழத்தெரு, கதவு எண். 420-ல் உள்ள இணை சார்பதிவாளர் எண்.4 அலுவலகத்தில், பத்திரங்களை பதிவு செய்வதற்கும், வில்லங்க சான்று நகல் வழங்க, திருமணப்பதிவு, பிறப்பு இறப்பு பதிவு

செய்ய வரும் பொது மக்களிடமிருந்து லஞ்சம் பெறுவதாகக் கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் பேரில், மேற்படி முகவரியில் உள்ள 4 எண் இணை சார்பதிவாளர் அலுவலகம் நேற்று 28.10.2020-ம் தேதி மதியம் சுமார் 14.00 மணியளவிலிருந்து நானும், மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் திருமதி.T.சூரியகலா அவர்களும் மற்றும் காவல் ஆளிநர்களுடன் கண்காணித்தோம். பின்பு நானும், மற்றும் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.சூரியகலா மற்றும் காவல் ஆளினர்களுடன் இணைந்து 28.10.2020-ஆம் தேதியன்று மாலை சுமார் 18.15 மணிக்கு மேற்படி அலுவலகத்தில் உள்ளே நுழைந்த போது மேற்படி அலுவலகத்தில் வடக்கு திசையில் உள்ள கண்ணாடி தடுப்பு அமைக்கப்பட்ட கணினி அறையில் உதவியாளர் திரு.பூசத்துரை அவர்களும், இளநிலை உதவியாளர் திரு.முனீஸ்குமரன் மற்றும் சோனைமுத்து மகன் திரு.செல்வக்கனி, பத்திர எழுத்தரின் உதவியாளர் திரு.G.பாலகிருஷ்ணன், திரு.R.பாலமுருகன் மற்றும் திரு.ஜெயபால் ஆகியோர்கள் இருந்தார்கள். அவர்களிடம் என்னையும், ஊழல் தடுப்பு பிரிவு ஆய்வாளர் திருமதி.சூரியகலா மற்றும் காவல் ஆளிநர்களை அறிமுகம் செய்து கொண்டோம். பின்பு நான் திரு.பூசத்துரை மற்றும் திரு.முனீஸ்குமரன் ஆகியோரிடம் சார்பதிவாளர் குறித்து கேட்டபோது, மேற்படி சார்பதிவாளர் திரு. பாலமுருகன் சற்று முன்னர் வீட்டிற்கு கிளம்பி சென்றதாக திரு.முனீஸ்குமரன் தகவல் தெரிவித்தார். அப்போது உடனே திரு.முனீஸ்குமரன் அவர்கள் சுமார் 18.20 மணிக்கு தனது செல்போன் எண் 97514 66420 -விருந்து சார்பதிவாளர் திரு. பாலமுருகன் அவர்களது செல்போன் எண் 99423 77676 -ற்கு தொடர்பு கொண்டு மேலதிகாரிகள் வந்திருப்பதால் உடனடியாக இணை சார்பதிவாளர் எண்-4 அலுவலத்திற்கு வரும்படி தகவல் சொன்னார். அதன்பேரில் திரு. பாலமுருகன் அவர்கள் சுமார் 18.40 மணிக்கு இணை சார்பதிவாளர் எண்.4 அலுவலகத்திற்கு தனது சாப்பாட்டு பையுடன் வந்தார். அவரிடம், நான் என்னையும், காவல் ஆய்வாளர் அவர்களையும் அறிமுகம் செய்தவுடன், சார்பதிவாளர் திரு.பாலமுருகன் பதட்டப்பட்டார். அவரை ஆசுவாசப்படுத்தி அவரது இருக்கைக்கு வடக்கு பக்கம் உள்ள இருக்கையில் அமர வைத்த பின்னர் அவரிடம் விசாரணை செய்தபோது தனது கையில் வைத்திருந்த Hi-Rich–என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்ட கருப்பு பார்டர் கொண்ட காக்கி கலர் சாப்பாட்டு பையிலிருந்து ஒரு பிரவுன் கலர் கவரை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பிரவுன் கலர் கவரை நான் வாங்கி, அதிலிருந்த பணத்தை எடுத்து, எண்ணி

பார்த்தபோது, அதில் மொத்தம் ரூ.2,11,000/- இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது அவர் இணைசார்பதிவாளர் எண்-4 அலுவலகத்தில் 27.10.2020 மற்றும் 28.10.2020 ஆகிய தேதிகளில் பதிவு செய்த ஆவணங்களுக்காக பெறப்பட்ட பணம் என்று தெரிவித்ததால் அந்தப் பணம் கைப்பற்றப்பட்டது. அவர் தனது மணிபர்சில் இருந்து பணம் ரூ.1,000- ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் குறித்து அவரிடம் கேட்டபோது தான் இன்று அலுவலகத்திற்கு வந்தபோது ரூ.1,100/- வைததிருந்ததாகவும், அதில் ரூ.100/ ஐ செலவு செய்து விட்டு மீதப்பணம் ரூ1,000/- வைத்திருப்பதாக தெரிவித்தார். அவர் கூறிய விவரங்களை தனிநபர் பண இருப்பு பதிவேட்டை பார்வையிட்டபோது சரியாக இருந்ததால் அந்த பணம் ரூ1,000/- மீண்டும் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் மேற்படி அலுவலத்தில் ஆஜரில் இருந்த சோனைமுத்து மகன் திரு.செல்வக்கனி அவர்களை விசாரணை செய்தபோது அவர் தனது சட்டைபையிலிருந்து கத்தையாக பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை நான் வாங்கி எண்ணி பார்த்தபோது, அதில் மொத்தம் ரூ.8,400/- இருந்தது. திரு.செல்வக்கனி அவர்களை விசாரணை செய்தபோது தான், பத்திர எழுத்தர் திரு.மனோகரன் என்பவரது அலுவலகத்தில் அவரிடம் உதவியாளராக இருந்து கொண்டு பத்திரப்பதிவு மற்றும் வில்லங்க சான்று பணி செய்வதாகவும் தெரிவித்தார். பின்னர் அந்த பணம் குறித்து விவரம் கேட்டபோது, ரூ.400 தனது சொந்தப்பணம் எனவும், மீதமுள்ள ரூ.8,000/ இணைசார்பதிவாளர் எண். 4 பத்திரப்பதிவு அலுவகத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு கொடுக்க வேண்டிய பணம் எனவும் தெரிவித்ததால், ரூ.8,000/ கைப்பற்றப்பட்டு சொந்தப்பணம் ரூ.400 அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் மேற்படி அலுவலகத்தில் ஆஜரில் இருந்த உதவியாளர் திரு.பூசத்துரை அவர்களை விசாரணை செய்தபோது அவர் தன்னிடம் இருந்து ரூ.1,400/- ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்தப் பணம் தனது சொந்த செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்ததால் அவரிடம் பணம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. ஆஜரில் இருந்த இளநிலை உதவியாளர் திரு.முனீஸ்குமரன் அவர்களை விசாரணை செய்தபோது அவர் தன்னிடம் பணம் எதுவும் இல்லை என்று தெரிவித்தார். பின்னர், தங்கபாண்டி மகன் ஜெயபால் அவர்களை விசாரணை செய்தபோது அவர் தன்னிடம் இருந்து ரூ.17,000/- ஐ ஆஜர் செய்தார். அந்தப் பணம் குறித்து அவரிடம் விளக்கம் கேட்க மேற்படி பணம் செல்போன் வாங்கவும், தீபாவளி பண்டிகைக்கு துணிகள் எடுக்க வைத்திருப்பதாக தெரிவித்தார். மேலும், மேற்படி அலுவலகத்தில் பணிபுரியும் தனது நண்பர் திரு.சோணை என்பவரை சந்திக்க வந்தபோது அவர் மேற்படி அலுவலகத்தில் இல்லை என்ற விவரத்தை தெரிவித்தார்.

மேற்படி பணம் ரூ.17,000/- மீண்டும் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. பின்னர் மேற்படி அலுவலகத்தில் ஆஜரில் இருந்த கணபதியா பிள்ளை மகன் திரு. பாலகிருஷ்ணன் என்பவரை விசாரணை செய்தபோது அவர் தன்னிடம் இருந்த பணம் ரூ.460/- ஐ எடுத்து ஆஜர் செய்து தனது சொந்த செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்தின்பேரில் அந்த பணம் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் மேற்படி அலுவலகத்தில் ஆஜரில் இருந்த டேட்டா என்டரி ஆப்பரேட்டர் திரு.ராஜேந்திரன் மகன் திரு. பாலமுருகன் என்பவரை விசாரணை செய்தபோது அவர் தன்னிடம் இருந்த பணம் ரூ.600/- ஐ எடுத்து ஆஜர் செய்து தனது சொந்த செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்தின்பேரில் அந்த பணம் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி சோதனையின்போது, பணம் மொத்தம் ரூ.2,19,000/-, மேற்படி பணம் ரூ.2,11,000/- வைக்கப்பட்டிருந்த இருந்த பிரவுன் கலர் கவர், மற்றும் Hi-Rich–என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்ட கருப்பு பார்டர் கொண்ட காக்கி கலர் சாப்பாட்டு பை ஆகியவை கைப்பற்றப்பட்டது. மேற்படி கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.2,19,000/-, பணம் ரூ.2,11,000/- வைக்கப்பட்டிருந்த இருந்த பிரவுன் கலர் கவர், மற்றும் Hi-Rich–என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்ட கருப்பு பார்டர் கொண்ட காக்கி கலர் சாப்பாட்டு பை, மேற்படி அலுவலகத்திலிருந்து அலுவலக இளநிலை உதவியாளர் திரு.முனீஸ்குமரன் அவர்கள் ஆஜர் செய்த கைப்பற்றப்பட்ட பத்து ஆவணங்களான 1) வருகைப்பதிவேடு 2020 (பக்கம் 1முதல் 20 வரை எழுதப்பட்டது) 2) தனிநபர் பண இருப்பு பதிவேடு 2020 ( பக்கம் 1முதல் 66 வரை எழுதப்பட்டது) 3)இயக்கப்பதிவேடு 2020 ( பக்கம் 1 முதல் 2 வரை எழுதப்பட்டது) 4) கணினியில் பிரிண்ட் எடுக்கப்பட்ட Year 2020 Month October Section 41 Account Madurai South Joint 4 date from 27 Oct – 2020 to 27 Oct – 2020 ( பக்கம் 1 முதல் 8 வரை) 5) கணிணியில் பிரிண்ட் எடுக்கப்பட்ட Year 2020 Month October Account A Madurai South Joint 4 date from 27 Oct – 2020 to 27 oct – 2020 ( பக்கம் 1 முதல் 4 வரை) 6) கணிணியில் பிரிண்ட் எடுக்கப்பட்ட Year 2020 Month October Account D Madurai South Joint 4 date from 27 Oct – 2020 to 27 oct – 2020 (பக்கம் 1 முதல் 12 வரை) 7)கணிணியில் பிரிண்ட் எடுக்கப்பட்ட Year 2020 Month October Section 41 Account Madurai South Joint 4 date from 28 Oct – 2020 to 28 oct – 2020 (பக்கம் 1 முதல் 6 வரை) 8) கணிணியில் பிரிண்ட் எடுக்கப்பட்ட Year 2020 Month October Account A Madurai South Joint 4 date from 28 Oct – 2020 to 28 Oct – 2020 ( பக்கம் 1 முதல் 8 வரை) 9) கணிணியில் பிரிண்ட்

எடுக்கப்பட்ட Year 2020 Month October Account D Madurai South Joint 4 date from 28 oct – 2020 to 28 oct – 2020 ( பக்கம் 1 முதல் 4 வரை) 10) மதுரை மண்டல துணை பதிவுத்துறைத் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள் எண். 3197/அ1/2020-1 நாள். 06.08.2020. ( பக்கம் 1 முதல் 2 வரை) மற்றும் 1) மதுரை இணை சார்பதிவாளர் எண்.4 அலுவலக சார்பதிவாளர் திரு.பாலமுருகன், 2)சோனைமுத்து மகன் திரு.செல்வக்கனி, 3) இணை சார்பதிவாளர் எண். 4 அலுவலக உதவியாளர் திரு.பூசத்துரை, 4) இளநிலை உதவியாளர் திரு.முனீஸ்குமரன், 5) பத்திர எழுத்தரின் உதவியாளர் திரு. G.பாலகிருஷ்ணன், 6)திரு. R.பால முருகன் மற்றும் 7)திரு.ஜெயபால் ஆகியோரை நான் தனித்தனியாக விசாரணை செய்து பெற்ற வாக்குமூலங்கள் ஆகியவற்றை இணைத்து 1)திரு.M.பாலமுருகன், சார்பதிவாளர், இணை சார்பதிவாளர் எண்.4 அலுவலகம், மதுரை மற்றும் 2) திரு.செல்வக்கனி, த/பெ. சோனைமுத்து ஆகியோர் மீது மேல் நடவடிக்கை எடுக்க தங்களிடம் அளிக்கின்றேன். ஒப்பம்/- XXXXX 29.10.20 (இரா. திருமலை) துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மதுரை. இணைப்பு :1. திடீர் இணை ஆய்வு குறிப்புரை, நாள் 28.10.2020. 2. பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள்- ஏழு. 3. கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் - பத்து. 4.ரொக்கத் தொகை ரூ.2,19,000/-.5. பிரவுன் கலர் கவர் - ஒன்று. 6. மற்றும் Hi-Rich–என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்ட கருப்பு பார்டர் கொண்ட காக்கி கலர் சாப்பாட்டு பை - ஒன்று.

Sir, Received this report today (29.10.2020) at 02.00 hrs along with Joint Surprise Check Proceedings, Dated:28.10.2020, Seven statements, Seized Ten documents, Cash Rs.2,19,000/- , Brown Colour Cover, Brown Colour lunch Bag with block border on which written “Hi-rich”. After obtaining permission from the Superior Officers, I (T.Suriyakala, Inspr. of Police, V&AC, Madurai) registered a case in Madurai V&AC Crime No.7/2020 u/s 7, 8 of Prevention of Corruption Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 on 29.10.2020 at 02.30 hrs. Sd/-XXXXX (T.Suriyakala), Inspr, V&AC, 29/10/2020.

The original FIR along with report of Tr. R. Thirumalai, Joint Surprise Check Proceedings Dated: 28.10.2020 and 7 statements are submitted to the Hon'ble Special Judge, Special Court for the Trial of Cases under PC Act, Madurai and other copies were sent to the officers concerned.

G. Suriyakala
Inspr of Police
V&AC, Madurai
29.10.2020